# புதிர்

சத்தம் காட்டாமல் ஜன்னல் வழியே
ஒரு புகையைப் போல்
எனக்குத் தெரியாமல் எப்படி நுழைந்தது முதுமை?
அருங்காட்சியகத்தின் கனமான கண்ணாடி சீசாக்களில்
என் இளமை ரசாயனத்தில் மிதப்பதை
நான் இன்று வேடிக்கை பார்க்கிறேன்.
என் கனவில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கும்
ஒருவனின் கனவில்
நான் வாலிபத்தைக் கனவு காண்கிறேன்.
வாழ்க்கையின் அர்த்தமற்ற நகைச்சுவையை நினைத்து
எனக்குள் மூளும் சிரிப்பை
நாக்குக்குக் கீழே வைத்துக் கொள்ளும் மாத்திரையைப்
போல
ஒளித்து வைக்கிறேன்.
வெயிலில் காயும் மீன் வலைகளைப் போல்
என் ஞாபகங்களில்
எப்போதும் வீசுகிறது கடலின் கவிச்சி நாற்றம்.
நிழல் மண்டிய கடலோரத்துத் தென்னந்தோப்பில்
மணலில் ஓய்வு கொள்ளும் ஓட்டைப் படகில்
இன்று குழந்தைகள் ஒளிந்து விளையாடுகிறார்கள்.
பெயர் தெரியாத ஒரு பெரிய பறவை
என் மொட்டை மாடியில் வந்தமர்ந்து
துருப்பிடித்த எந்திரம் சுழல்வதுபோல
கர்ண கடூரமான குரலில் கத்துகிறது தினந்தோறும்.
ஏன்?
--- 18 ஆகஸ்ட்டு 2020